2

# பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும்

TML 002

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

ஒன்ராறியோவில் பிள்ளைகள் தகாதமுறையில் நடத்தப்படாமல் இருப்பதற்காக அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் ஒரு சட்டம் இருந்து வருகிறது. இது **பிள்ளை மற்றும் குடும்ப சேவைகள் சட்டவாக்கம்** (*Child and Family Services Act* – CFSA) என்று அழைக்கப்படுகிறது. பிள்ளைகளின் நன்மைக்கு வேண்டியன எவை என்றும் பிள்ளைகளைப் பாதுகாத்து அவர்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது எப்படி என்றும் இந்தச் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது.

பிள்ளைகளுக்கு நலன் புரியும் முகவர் நிலையங்களை அரசாங்கம் நிதியுதவி புரிந்து ஆதரித்து வருகிறது. இவற்றை வழக்கமாக **பிள்ளைகள் உதவிச் சங்கங்கள்** (Children’s Aid Societies – CAS) என்று அழைப்பார்கள். அசிரத்தை உட்பட எல்லாவித தீங்கில் இருந்தும் பிள்ளைகளை பாதுகாப்பது இச்சங்கங்களின் பணியாக இருக்கிறது. அத்துடன் பிள்ளைகள் சுவீகார இல்லங்களில் வசிப்பதற்கும் ஒழுங்குசெய்து, குடும்பங்களுக்கு ஆதரவான பிற உதவிகளையும் CAS அமைப்பு செய்து வருகிறது. குடும்பங்களில் உள்ளவர்கள் ஒன்றிணைந்து வாழ உதவுவதும், தீவிரமான சில அபாய நிலைமைகளின் கீழ் பிள்ளைகளை அவர்களின் வீட்டில் இருந்து அகற்றுவதும் இவர்களின் கடமையாக உள்ளது.

ஒரு பெற்றார் என்ற முறையில் நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தீங்கிலிருந்து பாதுகாத்து, உணவு மற்றும் உறைவிடம் போன்ற அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் வழங்கவேண்டும். இதனை நீங்கள் செய்யவில்லை என்று கருதுவதற்கு இடமுண்டு என்று CAS அமைப்பு கருதுமானால் அது உங்கள் குடும்பம் பற்றி ஆராய்வதற்கு முடியும். இவ்வாறு CAS அமைப்பு ஆராய்ந்த பின்பு உங்கள் பிள்ளைக்கு **பாதுகாப்பு தேவைப்படுகிறது** என்று அது கருதுமானால் அது உங்கள் பிள்ளையை உங்கள் வீட்டில் இருந்து வேறு இடத்துக்கு அகற்ற முடியும்.

## "பாதுகாப்பு தேவைப்படுகிறது" என்றால் என்ன அர்த்தம்?

பின்வரும் நிலைமைகளின் கீழ் உள்ள ஒரு பிள்ளைக்கு **பாதுகாப்பு தேவைப்படுகிறது** என்று கருதப்படுகிறது:

- தனியே விடப்படுதல், பராமரிப்பு இல்லாது போதல் அல்லது அசிரத்தையாக நடத்தப்படுதல்.
- துர்ப்பிரயோகம் (abuse) செய்யப்பட்டு இருத்தல் அல்லது அவ்வாறு நடத்தப்படக்கூடிய சாத்தியம் கொண்டிருத்தல். இங்கு துர்ப்பிரயோகம் என்பதில் உடல்ரீதியான, பாலியல்ரீதியான மற்றும் உணர்வுகள் ரீதியான துன்புறுத்தல் அடங்கும். இவ்வாறு துர்ப்பிரயோகம் செய்பவர் யாராக இருந்தாலும் பரவாயில்லை, நீங்கள் உங்கள் பிள்ளைகளை அவர்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று சட்டம் சொல்லுகிறது. நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் துர்ப்பிரயோகம் செய்யாமல் இருந்தாலும், அப்படியான ஒரு துர்ப்பிரயோகத்தை நீங்கள் அறிந்து இருந்தீர்களா எனவும், அல்லது அப்படி அறிந்து இருந்தும் அதனை நீங்கள் தடுக்க முற்படவில்லையா எனவும் CAS அமைப்பு விசாரணை நடத்த முடியும்.

- வீட்டில் வயதுவந்த பெரியவர்கள் மத்தியில் துர்ப்பிரயோகம் நடைபெறுவதைக் காணுதல். சிலசமயங்களில் துர்ப்பிரயோகத்துக்கு உள்ளாகும் வயதுவந்த பெண்களையும் CAS அமைப்பு விசாரிப்பது உண்டு. இவ்வாறு செய்வதற்குக் காரணம் பெரியவர்களிடையில் நடைபெறும் துர்ப்பிரயோகம் பிள்ளையின் பாதுகாப்பையும் நலனையும் பாதிக்கிறது என்று அது கருதுகிறது.

நீங்கள் துர்ப்பிரயோகத்துக்கு உள்ளாகிறீர்கள் என்றால், அத்துடன் பொலிஸ் காவல்துறையினர் அழைக்கப்பட்டால், CAS அமைப்பு பணியாளர்கள் உங்கள் வீட்டுக்கு வரக்கூடும். அவர்கள் உங்களிடமும் உங்கள் பிள்ளையிடமும் கேள்விகள் கேட்பார்கள். தீங்கில் இருந்து உங்கள் பிள்ளையை காப்பாற்றுவதற்கு நீங்கள் செய்யவேண்டியவற்றை செய்யவில்லை என்று CAS பணியாளர்கள் கருதுவர் என்றால் அவர்கள் உங்கள் பிள்ளையை உங்களிடமிருந்து வேறொரு இடத்துக்கு அகற்றிவிடுவர். துர்ப்பிரயோகம் செய்பவர் நீங்கள் அல்ல என்ற போதிலும் இவ்வாறு அவர்கள் செய்யக்கூடும்.

## CAS அமைப்பு குடும்பங்களில் எவ்வாறு தலையிடுகிறது?

ஒரு பிள்ளைக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று நம்பும் எவரும் CAS அமைப்புக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது அவர்களது **அறிவிப்பதற்கான கடமை** என்று அழைக்கப்படுகிறது. பிள்ளைகளுடன் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு தொழில்துறை நிபுணரும் ஒரு பிள்ளையின் தொடர்பில் துர்ப்பிரயோகம் அல்லது அசிரத்தை இடம்பெறுகிறது என்று சந்தேகித்தால் அவர்கள் CAS அமைப்பினைக் கட்டாயமாக அழைத்து அதுபற்றி அறிவிக்கவேண்டும். ஆசிரியர்கள், மருத்துவர்கள், சமூகசேவைப் பணியாளர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு நிலைய ஊழியர்கள் போன்றோர் இவ்வகைத் தொழில்துறை நிபுணர்களில் அடங்குவர். இவ்வாறு அவர்கள் அறிவிக்கத் தவறினால் குற்றம் ஒன்றினைச் செய்தவர்களாக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

இவ்வாறு அறிவிக்கவேண்டிய கடமையை அவர்கள் தொடர்ச்சியாக கண்காணித்துச் செய்யவேண்டி உள்ளனர். அதன் அர்த்தம் என்னவெனில் இப்படியான துர்ப்பிரயோகத்தை ஒருவர் ஒரு முறை அறிவித்துள்ளார் என்றபோதிலும் அவ்வாறான ஒரு துர்ப்பிரயோகம் அல்லது அசிரத்தை நிகழ்வை இன்னொரு சமயத்தில் அவர் நடைபெற்றதாகக் கருதினாலும் அப்பொழுதும் அவர் அதுபற்றிக் கட்டாயம் அறிவிக்க வேண்டும்.

CAS அமைப்பின் கவனத்துக்கு உங்கள் குடும்பம் வேறுவழிகளிலும் உட்பட நேரிடலாம். நீங்கள் உங்களுக்கு உதவி தேவைப்படுவதாக CAS அமைப்பை அழைக்கும் சந்தர்ப்பம் இதற்கு ஓர் உதாரணம். மேலும் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கும் இடையே துர்ப்பிரயோகம் இடம்பெறுவதாகச் செய்யப்பட்ட அறிக்கை சம்பந்தமாக உங்கள் வீட்டுக்குப் பொலிஸ் காவல்துறையினர் வந்திருந்தால், அவர்களும் CAS அமைப்பினை அழைத்து உங்களைப் பற்றிக் கூறமுடியும்.

## CAS அமைப்பினர் உங்கள் விடயத்தில் தலையிடுகையில் ஆரம்பத்தில் என்ன நடைபெறும்?

### படிமுறை 1: பரிசீலனை செய்தல்

CAS அமைப்பினை யாராவது கூப்பிடும்பொழுது அமைப்பின் பணியாளர்கள் முதலில் **ஆரம்ப பரிசீலனை** ஒன்றினைச் செய்வர். தாம் வேறு ஏதாவது அவ்விடயம் சம்பந்தமாகச் செய்யவேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காக அவர்கள் இதனைச் செய்வர். அதாவது உங்கள் குடும்ப விஷயத்தில் தாம் தலையிட வேண்டிய அவசியம் உண்டா என்று தீர்மானிப்பதற்காக உங்களைப் பற்றிக் கிடைத்த அறிக்கை சம்பந்தமாக அவர்கள் சில நடவடிக்கைகளை எடுப்பர். சிலவேளைகளில் உண்மையில் உங்கள் பிள்ளை நன்கு பராமரிக்கப்படுகிறது என்று அவர்கள் இக்கட்டத்தில் திருப்தி அடைந்தால் CAS அமைப்பு இதற்கு மேல் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று முடிவுகட்டும்.

**படிமுறை 2: விசாரணை**

முன்பு குறிப்பிட்ட பரிசீலனை நடவடிக்கையைத் தொடர்ந்து CAS அமைப்பு ஒரு **விசாரணை நடத்துவதற்கு** முடிவு எடுக்கக் கூடும். இவ்வாறு நிகழுமானால் CAS அமைப்பினர் உங்களுடைய வீட்டுக்கு வந்து உங்களுடனும், உங்கள் துணைவர் மற்றும் உங்கள் பிள்ளையுடனும் கதைப்பார்கள். உங்கள் வீட்டுக்கு வெளியேயும் உள்ள உங்கள் குடும்ப அங்கத்தவர்கள், ஆசிரியர்கள் அல்லது அயலவர்கள் போன்றோரையும் அவர்கள் சந்தித்துக் கதைத்துத் தகவலினைப் பெறமுடியும்.

CAS அமைப்பு இவ்வாறு விசாரணை நடாத்தும்பொழுது, உங்கள் பிள்ளைக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறதா என்று அவர்கள் தீர்மானிக்க முயற்சி எடுக்கின்றனர். CAS அமைப்பின் விசாரணைக்கு உட்படுதல் ஒரு பாரதூரமான விடயம் ஆகும். அவர்கள் காட்டும் கரிசனைக்கு நீங்கள் தகுந்த முறையில் நடந்து காட்டத் தவறினால் CAS அமைப்பு உங்கள் விடயத்தில் மேலும் தீவிரமாகத் தலையிடலாம். இருந்து வரும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக காட்டும் விதத்தில் நடந்து கொள்ளுங்கள்.

இந்த விசாரணையின் முடிவில் உங்கள் பிள்ளைக்கு பாதுகாப்பு தேவையில்லை என்று CAS அமைப்பு தீர்மானிக்கக் கூடும். இவ்வாறு நிகழுமானால் இதற்கு மேல் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள்.

**படிமுறை 3: சேவை வழங்குதற்கான திட்டம்**

உங்கள் பிள்ளைக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று CAS அமைப்பு தீர்மானம் செய்தால், அவர்கள் "இருக்கும் நிலைமையை மிகக்குறைவாகக் குழப்பும்" ஒரு முறையிலேயே நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில், முடியுமான பொழுதெல்லாம் CAS அமைப்பு உங்கள் குடும்பத்துடன் சேர்ந்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதுடன், உங்கள் பிள்ளையை உங்கள் வீட்டிலேயே தங்குவதற்கு அனுமதிக்கும்.

குடும்பங்களுடன் சேர்ந்து CAS அமைப்பு செயற்படும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒரு ஒப்பந்தத்தில் உங்களைக் கையொப்பம் இடும்படி CAS அமைப்பு உங்களைக் கேட்கும். இந்த ஒப்பந்தத்தில் உங்கள் பிள்ளையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்கள் எனக் குறிப்பிடப்பட்டு இருக்கும். இந்த ஒப்பந்தத்தை வழக்கமாக **சேவை வழங்குதற்கான திட்டம்** என்று அழைப்பர். ஒரு சேவை வழங்குதற்கான திட்டத்தில் கையொப்பம் இடும்படி கேட்கப்பட்டால், சட்ட ஆலோசனை பெறுங்கள். இப்படியான ஒரு சேவை வழங்குதற்கான திட்டத்தில் நீங்கள் கையொப்பம் இடுவதற்கு மறுத்தால், அல்லது கையொப்பமிட்ட பின்னர் அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால், CAS அமைப்பு உங்கள் பிள்ளையை உங்கள் வீட்டில் இருந்து வேறிடத்துக்கு அகற்றுவதற்கு முடியும்.

சேவை வழங்குதற்கான திட்டம் ஒன்றில் நீங்கள் கையொப்பம் இட்ட பின்பு, CAS அமைப்பு வழக்கமாக உங்கள் குடும்பத்துடன் சிறிது காலம் தொடர்பினைத் தொடர்ந்து வைத்திருக்கும். இக்காலத்தில் உங்கள் பிள்ளை பாதுகாப்பாக இருக்கிறது என்றும், அது நன்கு பராமரிக்கப்படுகிறது என்றும், நீங்கள் அது சம்பந்தப்பட்ட திட்டத்தினை பின்பற்றி வருகிறீர்கள் என்றும் CAS அமைப்பு உறுதிப்படுத்த முயற்சி எடுக்கும்.

**படிமுறை 4: பிள்ளையை வேறிடம் அகற்றுதல்**

CAS அமைப்பு கேட்டவற்றை நீங்கள் செய்ய மறுத்தால், அல்லது உங்கள் பிள்ளைக்கு தீங்கு நேரிடலாம் என்று CAS அமைப்பு தீர்மானித்தால் அது உங்கள் பிள்ளையைக் **கைப்பற்றுவதற்கு** (apprehend) அல்லது உங்கள் வீட்டில் இருந்து வேறிடத்துக்கு அகற்றுவதற்கு முடியும். உங்கள் பிள்ளையை அவர்கள் உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவருடன் அல்லது வளர்ப்பு வீடு ஒன்றில் அல்லது குழுமுறையில் வளரும் வீடு ஒன்றில் அனுமதிக்கக் கூடும்.

சில வகையான துர்ப்பிரயோகங்கள் சட்டரீதியான **குற்றச் செயல்களாகவும்** (crimes) கருதப்படுகின்றன. உடல்ரீதியான முறையில் அல்லது பாலியல் ரீதியான முறையில் இடம்பெறும் துர்ப்பிரயோகம் பற்றி யாராவது தம்மிடம் எப்பொழுதாவது சொன்னால், அதுபற்றிக் காவல்துறையினரிடம் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறைக் கொள்கை பல CAS காரியாலயங்களில் பின்பற்றப்படுகிறது. காவல்துறையினர் அத்துர்ப்பிரயோகத்தை விசாரணை செய்து அதற்கான குற்றவியல் ரீதியான குற்றச்சாட்டையும் சுமத்துவர். இவ்வாறான குற்றவியல் வழக்கு பிள்ளைப் பாதுகாப்பு சம்பந்தமான விசாரணைக்கு மேலாகப் புறம்பாக நடைபெறும். குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் காரணத்தால் பிள்ளைப் பாதுகாப்பு வழக்கு நின்றுவிடப் போவதில்லை.

## பிறந்தவுடன் பிள்ளையைக் கைப்பற்றுதல்

உங்கள் பிள்ளையின் பாதுகாப்பு தொடர்பாகக் கணிசமான அளவு ஆபத்து இருக்குமானால், பிள்ளை பிறந்த உடனேயே அதனைக் கைப்பற்றும் அதிகாரம் CAS அமைப்புக்கு உண்டு. உதாரணமாக, உங்கள் முந்திய பிள்ளைகளை CAS அமைப்பு அகற்றியிருந்தால், உங்களுக்கு போதைவஸ்து உபயோகம் அல்லது மதுப்பிரச்சினை தீவிரமான முறையில் இருக்குமானால், நீங்கள் ஒரு தங்குமிடம் அற்றவர் என்றால், அல்லது பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் இவ்வாறு நடைபெறலாம். நீங்கள் ஒரு விடலைப்பருவத்தினராக இருந்தால், குறிப்பாக CAS அமைப்பின் பராமரிப்பின் கீழ் எப்பொழுதாவது நீங்கள் இருந்திருப்பின், பிள்ளை பிறந்தவுடன் CAS அமைப்பு அதனைக் கைப்பற்றும் ஆபத்து விசேடமாக உங்களுக்கு இருக்கும்.

## பிள்ளைப் பாதுகாப்பு விடயத்தில் நீதிமன்றம் செல்லுதல்

பிள்ளைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிக்கலானவை ஆகும். அவை ஆரம்பித்ததும் வேகமாக நடந்தேறத் தொடங்கும். உங்கள் பிள்ளை உங்களுடைய வீட்டில் இருந்து அகற்றப்படுமானால், CAS அமைப்பு அது சம்பந்தமான வழக்கினை ஐந்து நாட்களுக்குள் ஒரு நீதிபதியின் முன்பாகக் கட்டாயம் கொண்டு வரவேண்டும். இவ்வாறு உங்களுக்கு நிகழ்ந்து இருந்தால், உடனடியாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. **பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)**
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.